# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
## DEPOSITIONS OF WITNESSES
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
## DEPOSITIONS OF WITNESSES P.W.3
## OS.NO.56/2018(c/w.57/2019,24/2019,66/2019)
## Joint Trial

**Name** : Dhanalakshmi

**Father/Husband Name** : Panneerselvam

**Age** : 52

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.04.2025**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்:** 12.00 p.m.

**குறுக்கு விசாரணை**

என் கணவர் பெயர் பன்னீர்செல்வம்(1ம் வாதி). இந்த வழக்கு தாக்கல் செய்தது என் கணவரும் என் மச்சனரும் தான். என் கணவர் தாக்கல் செய்த ஆவணங்களில் நான் சாட்சி கையெழுத்து போட்டேன். அது பற்றி எனக்கு தெரியும். என் கணவர் 30.05.2021 ல் இறந்தார். நான் 7 ஆம் வகுப்பு படித்துள்ளேன். என் கணவர் 8 ஆம் வகுப்பு படித்திருந்தார். என் கணவருடன் உடன் பிறந்தவர்கள் லிங்க மூர்த்தி மற்றும் பத்மாவதி. பத்மாவதி உயிருடன் இருக்கிறார்கள். அவர் ராணிபேட்டை அவளக்கறை கிராமத்தில் இருக்கிறார். பத்மாவதியின் கணவர் பெயர் ராதாகிருஷ்ணன். ஏற்கனவே என் கணவரும் மச்சனரும் அசல் வழக்கு எண்.118/2003 என்ற வழக்கை தாக்கல் செய்தது தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கின் தீர்ப்பு என்ன ஆனது என்றால் அசல் உயில் தாக்கல் செய்ய வேண்டும் என்று தள்ளுபடிசெய்து விட்டார்கள். நாங்கள் மேல்முறையீடு செய்தோம். மேல்முறையீடு நம்பர் நினைவில்லை. அந்த மேல்முறையீடு மனுவும் அசல் இல்லை என்று தள்ளுபடியாகிவிட்டது அதனால் தான் நாங்கள் இங்கு வழக்கு தாக்கல் செய்துள்ளோம்.

அதன் பிறகு இரண்டாவது மேல்முறையீடு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தோம். அந்த உத்தரவில் நீங்கள் அசல் உயிலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து புது வழக்கு தாக்கல் செய்து கொள்ளுங்கள் என்று தீர்ப்பு சொன்னார்கள். அவ்வாறு தீர்ப்பு எதுவும் சொல்லவில்லை என்றாலும் நானாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அந்த தீர்ப்பு என் மச்சனரிடம் தான் உள்ளது. நான் சொல்லும் வாசகங்கள் எதுவும் வா.சா.ஆ. 10 ல் இல்லை என்றால் சரியல்ல என் வழக்கறிஞர் அவ்வாறு தான் கூறினார். (ஆங்கிலம் படிக்க தெரியாது. கண்ணாடி இல்லாமல் ஆவணத்தை என்னால் பார்க்க இயலாது என்று சாட்சி சொல்கிறார்).

சாம்பசிவம் என்பது என் மாமனார். அவர் தான் குடும்பத்தில் பெரியவர். அவர் உடன் பிறந்தவர்கள் 2 பேர். ஒரு தங்கை ஒரு தம்பி. அவர்கள் பெயர் கோவிந்தசாமி மற்றும் யமுனா. பன்னீர்செல்வமும், லிங்கமூரத்தியும் சாம்பசிவத்தின் வாரிசுகள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் கலா வகையறா கோவிந்தசாமியின் வாரிசுகள். யமுனாவை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

சாம்பசிவம், கோவிந்தசாமி மற்றும் யமுனா ஆகியோர்கள் ஆதிமூலத்தின் வாரிசுகள் என்றால் சரிதான். லிங்கமூரத்திக்கு எத்தனை திருமணம் நடந்தது என்றால் 2 திருமணம் நடந்தது. என் கணவருக்கு நான் மட்டும் தான் மனைவி. என் கணவர் food corporation of India ல் மூட்டை தூக்கும் தொழில் செய்துவந்தார். மாதம் ரூ. 30,000 சம்பாதிப்பார். லிங்கமூரத்தியின் முதல் மனைவி பெயர் மங்களேஷ்வரி.2 வது மனைவி பெயர் ரேவதி. ரேவதி மற்றும் மங்களேஷ்வரி சகோதிரிகள் என்றால் இல்லை. மங்களேஷ்வரியை தான் மங்கை என்று கூறியுருப்பார்கள். தாவா சொத்தை ஆதிமூலம் யாரிடமிருந்து வாங்கினார் என்று சொல்ல முடியுமா என்றால் கன்னியப்பா கவுண்டரிடமிருந்து 1952 ல் வாங்கினார். அதன் சர்வே எண். 324/1– 1 ஏக்கர் வாங்கினார்.

என் மச்சனர் லிங்கமூரத்தியும் food corporation of India ல் மூட்டை தூக்கும் தொழில் செய்கிறார். ஆதிமூலம் உயிருடன் இருக்கும்போதே அண்ணன்

தம்பிகள் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் தெரியும். எந்த தேதி எந்த மாதத்தில் நடந்தது என்று நினைவில்லை. வருடம்.1970. நான் சாம்பசிவம் சகோதரி யமுனாவின் மகள். நான் பாக பிரிவினை பத்திரம் செய்யும்போது நான் உடன் இருந்தேன். இந்த பத்திரத்தில் அனைத்து சொத்துக்களையும் பிரித்து கொண்டார்கள் என்றாலும் ஆதிமூலத்திற்கு எந்த சொத்தும் வைக்கவில்லை என்றாலும் சரிதான், அது ஆதிமூலத்தின் அப்பாவின் சொத்து. அவ்வாறு இந்த பத்திரத்தில் எழுதப்படவில்லை என்றால் சரிதான்.

ஆதிமூலத்தின் அப்பா தாண்டவராயனின் சொத்து தான் பாகபிரிவினை செய்யப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதேபோல் ஆதிமூலத்தின் சொத்து தனியாக உள்ளது என்று வா.சா.ஆ. 12 ல் இல்லை என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் நான் கையெழுத்து செய்யவில்லை. அதில் யார் கையெழுத்து போட்டார்கள் என்றால் 3 நபர்கள் சாட்சி கையெழுத்து போட்டார்கள். 1– ஆதிமூலம், 2– நடேச நாயக்கர், 3– தேவராஜ் என்பவர்கள் ஆவர். வா.சா.ஆ. 12–பாகபிரிவினை பத்திரத்தை எழுதியவர் பக்கத்து ஊர்க்காரர் பெயர் தெரியாது. தற்போது என் வயது 55. நான் 1970 ல் பிறந்தேன். இந்த பத்திரம் செய்யும்போது எனக்கு வயது 8. நான்காவது படித்து கொண்டிருந்தேன். வா.சா.ஆ. 12 ஆவணத்தை பற்றி எதுவும் தெரியாது என்றாலும் 8 வயது நபருக்கு எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல.

வா.சா.ஆ. 12 ல் என் அம்மா சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் இல்லை. அப்போது என் அப்பா உயிருடன் இருந்தார். 1978 ல் என் அம்மாவும் உயிருடன் தான் இநர்தார். நான் பெங்களூரில் இருந்தேன். எனக்கும் பன்னீர்செல்வத்திற்கும் 19.05.1986 ல் திருமணம் நடந்தது. இந்த சொத்து உள்ளது காட்பாடியில் என்றால் சரிதான். திருமணம் ஆகும் வரை படித்ததது வளர்ந்தது எல்லாம் பெங்களூரில் என்றால் சரிதான். என் அப்பா கார் ஓட்டுனர். என் உடன் பிறந்தவர்கள் 3 பேர். பள்ளி விடுமுறை நாட்களில் திருவிழா காலங்களிலும் சுமார் 3 மாதத்திற்கு ஒரு முறை காட்பாடிக்கு வருவோம்.

1978 ல் குடும்ப ஏற்பாடு செய்தது என் மாமனார் மற்றும் சின்ன மாமனார் ஒப்பு கொண்டு எழுதியது என்றால் சரிதான். அந்த குடும்ப ஏற்பாட்டில் என் அம்மா யமுனாவிற்கு எந்தவித சொத்தும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த குடும்ப ஏற்பாட்டில் சர்வே எண் எதுவும் சொல்லப்படவில்லை என்றாலும் இருக்கும் சொத்துக்கள் அனைத்தும் என்றுதான் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல சர்வே எண் தான் இருக்காது, நாகமரத்து துண்டு, காக்கு கழனி, முருங்க மரத்து துண்டு, மேல் கழனி என்று தான் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்குண்டான சர்வே எண்களை என்னால் சரியாக சொல்ல இயலாது என்றால் தனித்தனியாக சொல்ல இயலாது, நாகமரத்து துண்டிற்கு மட்டும் சர்வே எண். 408.

ஆதிமூலம் 18.03.1987 ல் இறந்தார். தாவா சொத்தும் சேர்த்து தான் குடும்ப ஏற்பாடு ஆனதாக சொல்வது தவறு. என் தாயாருக்கு இதுநாள் வரை எந்த சொத்தும் ஒதுக்கவில்லை என்றால் சரியல்ல, எனது தாயாருக்காகதான இந்த சொத்து வைத்திருந்தார்கள் எங்களுக்கு திருமணம் செய்து கொடுத்ததால் உயில் எழுதினார்கள். அவ்வாறான வாசகங்கள் எதுவும் உயிலில் இல்லை என்றால் சரிதான்.

நான் சொன்னது போல் அந்த சொத்து என் அம்மாவிற்காக ஒதுக்கப்படவில்லை என்றாலும் நான் வழக்கிறகாக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அந்த உயிலின் சாட்சிகள் யார் என்றால் எங்கள் ஊரை சேர்ந்த பால கிருஷ்ணன், கத்துவாடி கிராமம். இன்னொரு பெயர் மூக்கன் என்று கூறுவார்கள். அவர் சரியான பெயர் எனக்கு தெரியவில்லை. என் அம்மா அந்த உயிலில் சாட்சி கையெழுத்து போடவில்லை. என் மாமாக்களின் சம்மதத்துடன் தான் எழுதப்பட்டது. என் மாமாக்களும் அதில் சாட்சியாக இல்லை. எனக்கு திருமணமாகும்போது எனக்கு வயது 16. இந்த உயிலே போலியாக தயாரித்தது என்றாலும் லிங்கமூர்த்தி சொல்லி கொடுத்ததன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உயில்

எழுதியது 27.01.1985. நான் பத்திர அலுவலகம் செல்லவில்லை வீட்டில்தான் இருந்தேன்.

அந்த உயில் எழுதும்போது என் கணவர் பன்னீர்செல்வம் மற்றும் லிங்கமூர்த்தி முன்னிலையில் எழுதப்பட்டது. அப்போது என் மாமனார் சாம்பசிவம் உயிருடன் இருந்தார். என் சின்ன மாமானரும் உயிருடன் இருந்தார். மேற்கூறிய 5 நபர்களும் பேசி முடிவு செய்துதான் இந்த உயில் எழுதப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 5 நபர்களும் இந்த உயிலில் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். எனக்கு திருமணமாவதற்கு முன்பே மேற்படி சொத்து உயில் எழுதப்பட்டது என்றால் சரிதான்.

எனக்கு திருமணமானால்தான் உயில் செல்லும் என்று அந்த உயிலில் எழுதப்படவில்லை என்றால் சரிதான். சின்ன மாமானாரை குறித்து இந்த உயிலில் வாசகம் இல்லை என்றால் சரிதான். சின்ன மாமானார் பிள்ளைகளுக்கு ஏன் உயிலில் சொத்து கொடுக்கவில்லை என்பதற்கு எந்தவித காரணமும் உயிலில் இல்லை என்றால் சரிதான். என் சின்ன மாமனாருக்கு 4 மகள்கள் 1 மகன். இந்த உயில் ஆவணத்தில் சாம்பசிவ கவுண்டருக்கும் எந்த வித சொத்தும் இல்லை என்றால் சரிதான்.

ஆதிமூலம் 1987 ல் இறந்தார். அவர் வயதான காரணத்தினால் இறந்துவிட்டார் அவர் வயது 95. அவர் இறப்பதற்கு முன்பு அவர் மனம் தடுமாற்றமாக இருந்தார் என்றால் சரியல்ல. உயிலில் ஆதிமூலம் எத்தனை கையெழுத்து போட்டார் என்றால் போட்டார் ஆனால் எத்தனை கையெழுத்து என்று தெரியாது. கையெழுத்தும் போட்டார், கை நாட்டும் வைத்துள்ளார். ஒவ்வொரு கையெழுத்துக்கும் வித்தியாசம் உள்ளது என்று சொல்வது சரியல்ல. மேற்படி உயில் எழுதுவதற்கும் ஆதிமூலத்திற்கு எந்த உரிமையும் இல்லை என்பது சரியல்ல. (சாட்சி சொல்கிறார் –அவர் வாங்கிய அசல் பத்திரமும் நான் தாக்கல் செய்துள்ளேன். )

அது போலியான உயில் என்பதால் அதன் அடிப்படையில் நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு 56/2018 என்ற வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொல்வது சரியல்ல. இதே சொத்து சம்மந்தமாக அசல் வழக்கு எண். 118/2013 என்ற வழக்கை தாக்கல் செய்து உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்த பின்னர் அதே பரிகாரத்திற்காக இரண்டாவது அசல் வழக்கு 56/2018 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்: 02.50 p.m**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.